# 2017 ஆவணி மாதத்திற்கான இறைவேண்டலுக்கான மற்றும் நடுநிலைவகுத்தலுக்கான கைகொடுத்தல்

## *"அவர் உங்களுக்குசொல்வதெல்லாம் செய்யுங்கள்" (புனிதயோவான் 2:5)*

இக்காலகட்டத்தில் இறைவேண்டல் மற்றும் நடுநிலைவகித்தலின் பணியாளர்கள் என்றவகையில் எமக்கு காரியங்கள் இருக்கின்றன. தூய ஆவியானவருக்கு நாம் வழிப்புறும் அளவிற்கு அதிகளவான பிரச்சினைகள் எமது குடும்பத்தில், எமது பங்கில் எமது கிராமத்தில், எமது சங்கத்தில் மகாபுபுதுவையினுள் பரிசுத்த திருச்சபையினுள் அடிக்கடி ஆட்டங் கண்டவாறு இருப்பதனை எம்மால் காணமுடியும். பசாசுமிகவும் துல்லியமான முறையில் தீய ஆவியை எம்மிடையில் பரப்பிட விரைவாக செயல்படுகிறது என்பது எமக்குத் தெள்ளத் தெளிவாகிறது. அதற்கு நாம் கலவரப்பட தேவையில்லை. ஏனெனில் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் எமக்காக நிரந்தரமும் நடுநிலை வகிக்கிறார். அவ்வாறே தூய ஆவியானவர் பாக்கியவதியான அம்மா உள்ளிட்ட அனைத்து புனிதர்களும் எமக்காக நிரந்தரமும் ஆண்டவர் முன்னிலையில் தோன்றிநிற்பதோடு விசேடமாக எமது இலங்கையின் புனிதர் யோசேப்வாஸ் அடிகளாரும் எம்முடனேயே இருக்கிறார்.

ஆதலால் எம்முள், எம் நாட்டினுள் இருக்கும் வேற்றுமைகள், ஆளுநர்களின் இருளான முன்மாதிரிகை, களவு, வஞ்சகம், ஊழல்களுக்கு சரியான செயல் வழிகளை எடுக்க முடியாமை, பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற குப்பைகள் இடத்திற்கிடம் நிரம்புவதால் ஏற்படும் பிரச்சினைகளால் டெங்கு நுளம்பு விருத்தியடைவதால் ஏற்படும் உயிர்ச்சேதங்கள், நச்சுத்தன்மையுள்ள உணவுகள், கிருமிநாசினி அடித்த மரக்கறிகள், பழங்கள் இவற்றால் ஏற்பட்டுள்ள புற்றுநொய், வரட்சி, வெள்ளம், சுத்தமான தண்ணீர் இல்லாமை, மரங்களை வெட்டுவதால் நீறூற்றுக்கள் வற்றிப் பலவித நோய்கள் தனியார் மருத்துவ பீடங்கள் ஏற்படுவதன் பிரச்சினை, அரச வைத்தியசாலைகளில் முறையான சிகிச்சைகள் அற்ற நிலைமை, ஏழ்மை நிலை, தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படும் உண்மையற்ற காட்சிகள், மேலதிக கல்விக் கடைகள், தனியார் மருத்துவமனைகளில் அறவிடப்படும் அதிக கட்டணம், ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம், முக்கியமான மதங்களில் தர்மத்தினை நிலைநிறுத்தாமல் செய்கின்ற பக்தி அப்பியாசங்கள், போன்று இங்கு கூறாமல் போன பலவற்றாலும் மக்களின் ஆன்மீகம் பாதிப்படைந்துள்ளது.

ஆதலால் இந்த இருளுக்கு எதிராக நாம் விசுவாசத்தின் ஒளியை ஏற்றுவோம். ஆண்டவரின் சந்நிதியில் அழுதவாறு கண்ணீர் சிந்தியவாறு செபிப்போம்.

**"எனவே வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமை குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக் கொள்வோமாக. ஏனெனில் நம் தலைமைக்குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல. மாறாக எல்லாவகையிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டவர். எனினும் பாவஞ் செய்யாதவர்.**

**எனவே நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்றவேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும் அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக”** ( எபிரேயர் 4: 14-16)

அன்று கானான் ஊரில் திருமணவீட்டில் திராட்சை இரசம் போதாமல் வந்திருந்த விருந்தினர்களுக்கு பரிமாற முடியாமல் வெட்கத்திற்குள்ளான வீட்டாரின் துன்பம் துடைத்திட முன் வந்த பாக்கியவதியான அம்மா, அதாவது மரியன்னை மகனின் உதவியைக் கேட்டு அவருடைய நடுநிலைவகித்தலினூடாக தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றும் புதுமையை செய்தார். நாம் இம்மாதம் முழுவதும் பாக்கியவதியான அம்மாவின் நடுநிலைவகித்தலினூடாக விசுவாசத்தின் படிகளை எடுத்திட முயற்சிப்போம்.

அர்ச்சியஸ்ட மரியாயே சருவேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் என்னை மரணவேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

*முதலாம் வாரம் தியானவாசிப்பு* :- புனித யோவான் 2: 1-12

***வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-***

இக்காலத்தில் எமது குடும்பம், பங்கு, சங்கம், திருச்சபை, நாடு இவற்றினுள் இருக்கும் அனைத்துபிரச்சினைகளுக்காகவும் சத்தமாக முறையிட்டு கண்ணீர் வடித்து செபியுங்கள். (10 நிமிடம்)
இறுதியில் சாத்தானை விரட்டும் செபத்திற்கு உள்ளாகவும்.

***வேறு வேண்டுதல்கள் :-***

- சுவாமி அப்பா, இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசமத குழு, உட்பட புபுதுவையில் பொறுப்புவகிக்கும் அனைவருக்காகவும்
- மாதத்தில் முதல் ஞாயிறன்று நடைபெறும் சங்கம குடும்பதினத்திற்காக
- ஏனைய வேண்டுதல்கள்……..

***இரண்டாம் வாரம் :-***தியானவாசிப்பு எபிரேயர் 5: 7-10

***வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-***

2021 இல் இலங்கை புபுதுவைக்கு 50 வருடம் பூர்த்தியாவதால் இக்காலகட்டத்தில் தேசிய இறைவாக்கினர் குழுவால் எமக்கு வழிகாட்டப்பட்டுள்ள மனம் வருந்துதலின் படிமுறைகளுக்கு அனைத்து மக்களும் உள்ளாவதற்கு தேவையான தூய ஆவியின் வல்லமையை கேட்டு செபிப்போம்.

- நாம் இருக்கும் இடத்திலிருந்து இருக்க வேண்டிய இடத்திற்கு திரும்புதல், புபுது கெரிஸ்மாவின் 4 அனுபவங்களுக்கு விருப்பத்துடன் உள்ளாகுதல்.

- புனித யோசேப்வாஸ் அடிகளாரின் தூதுச் சேவைக்கு அமைய கிறிஸ்து அளித்தலுக்கு உள்ளாகுதல்.
- கிறிஸ்து அளித்தலின் உரைகளை ஆரம்பித்தல்
- இவ் வருடதலைப்பினுள் வாழ்தல்

*வேறுவேண்டுதல்கள்*

- ஆவணி மாதம் 11ம் திகதி முதல் 15 வரையிலான தினங்களில் ஸ்ரீ பிரசங்சாராமயில் நடைபெறும் தேவதாய் அருட்சாதனங்கள் பற்றிய ஞான ஒடுக்கத்திற்காக
- ஆவணி 26, 27ந் திகதிகளில் நடைபெறும் பொறுப்பாளர்களாக இருக்கும் விதவை தாய்மார்களின் ஞான ஒடுக்கத்திற்காக
- ஆவணி 29ம் திகதி நடைபெறும் சிறுவர்களின் தினத்திற்காக
- ஏனைய வேண்டுதல்கள்…………

*மூன்றாம் வாரம் தியானவாசிப்பு :-* 2017 ஆடிமாத தூய ஆவியில் பயணம் நூலில் சுவாமி அப்பாவின் செபத்திற்கான கைகொடுத்தலின் கடிதத்தினையும் பின்பக்கத்தில் இருக்கும் அட்டைப்படக் கதையையும் வழிகாட்டலுக்கு உள்ளாகி ஒருவர் ஒருவருக்குக் கிடைத்த ஒளி மற்றும் அனுபவத்தினை பகிர்ந்து கொள்ளவும். (15 நிமிடம்)

*வேண்டுதலுக்கான விசேடநோக்கு :-*

சுபெந்தி, சபெந்தி, சுரெந்தி, மற்றும் பிரபோதய (புத்தெழுச்சி) வேலைதிட்டங்களுக்காக

- ஏனைய வேண்டுதல்கள்…………..

*நான்காம் வாரம் தியானவாசிப்பு :-*எபிரேயர் 12: 1-13

*வேண்டுதலுக்கான விசேட நோக்கு*

தேசத்திற்காக (20 நிமிடம்)

*வேறு வேண்டுதல்கள்*

- வேண்டுதல் குழுக்களிலுள்ள அனைவருக்காகவும்
- புபுது வாழ்க்கையினின்று விலகி இருக்கும் அனைவருக்காகவும்
- கிறிஸ்து அளித்தல் வேலைத்திட்டம் மற்றும் தூரப்பிரதேசங்களில் திருப்பலிக்கு கூட பங்குபற்ற முடியாமலிருக்கும் மக்களுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்………….

*எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்*

*இடைவிடாதுசெபியுங்கள்*

*எல்லாவற்றிற்கும் நன்றி கூறுங்கள்*

இறைவேண்டுதல் மற்றும் நடுநிலைசேவை